(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2024

**பொருளியல்**
**Economics**

Three Hours 10 Min.

Gr. 12 (2025)

21 | T | I,II

**அறிவுறுத்தல்கள்**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

### பகுதி I

01) பின்வருவனவற்றில் நுண்பாக்கம் பொருளியல் ஆய்வுக்குட்படும் அலகுகளின் சேர்க்கை யாது?
 (1) உற்பத்தியொன்றின் சந்தைப்படுத்தல், முதலீடுகள்
 (2) வேலைவாய்பு, பொருளாதார வளரச்சி
 (3) அருமை, பணவீக்கம்
 (4) மொத்த வெளியீடு, எல்லைச் செலவு
 (5) நுகர்வோரின் நடத்தை, அருமை

02) பின்வருவனவற்றில் நியமக்கூற்றாகக் கருதப்படுவது எது?
 (1) அரச ஊழியர்களி சம்பங்கள் உயர்வாக உள்ளது.
 (2) சம்பள வேறுபாடுகள் குறைக்கப்படல் வேண்டும்.
 (3) விலைக்கும் நிரம்பல்த் தொகைக்கும் இடையில் நேர்தொடர்பு உண்டு.
 (4) இலங்கையின் சனத்தொகை வளரச்சி வீதம் குறைவானது ஆகும்.
 (5) மாணவர்களின் சுய கற்றல் ஆர்வம் மிகவும் குறைந்து வருகின்றது.

03) பொருளாதார வளங்கள் தொடர்பான சரியான கூற்றுச் சேர்கை யாது?
 A – அருமையானவையும் நுகர்விற்கு உட்படுபவையும்.
 B – பயன்பாட்டின் போது அமையச் செலவை உருவாக்குபவை.
 C – நிரம்பல் வரையறுக்கப்பட்வையும் உற்பத்திக்கான உள்ளீடுகளும்
 D – உற்பத்திக்கான சகள உள்ளீடுகளாகும்.

 (1) A,B,C (2) A,D (3) B,C (4) B,C,D (5) B,D

04) அமையச் செலவு நேர்கணியமாக காணப்படக் கூடிய சந்தர்ப்பம் யாது?
 (1) காற்றை சுவாசிக்கும் போது
 (2) தேசிய பாதுகாப்பை அனுபவிக்கும் போது
 (3) வேலையற்ற வளங்களைப் பயன்படுத்தும் போது
 (4) சூரிய ஒளியைப் பயன்படுத்தும் போது
 (5) விவசாயிகள் அரசின் நீர்பாசனத்திட்ட நீரைப்பயன்படுத்தும் போது

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

05) பின்வரும் கூற்றுக்களில் ஏற்புடைய கூற்றை தெரிவு செய்க.
   (1) விலைக் பொறிமுறைய அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக பயன்படுத்தியதால் அவை முதலாளித்துவப் பொருளாதாரங்கள் எனப்பட்டன.
   (2) அடிப்படைப் பிரச்சனைகள் காரணமாகவே பொருளாதார முறமைகள் வேறுபட்டன.
   (3) சமூகச் சந்தைப் பொருளாதாரம் அடிப்படையில் ஒரு கட்டளைப் பொருளாதாரம் ஆகும்.
   (4) சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோர் பூரண இறைமையுடையவர் என்பது தவறாகும்.
   (5) கட்டளைப் பொருளாதாரத்தில் மத்தியதிட்டமிடல் குழு தீர்வைக் காட்டுகின்றது.

06) இயற்க்கை வளங்கள் என்பதனுல் உள்ளடங்க கூடியது?
   (1) துறைமுகங்கள்   (2) நெல்வயல்   (3) கிணற்று நீர்
   (4) கடற்கரை   (5) மின்விசிறிக்காற்று

07) பின்வருவனவற்றில் மனித மூலதனமாக கருதப்படக கூடியது எது?
   (1) வைத்தியர்கள்   (2) சட்ட ஆலோசகர்   (3) ஆசிரியர்கள்
   (4) மனிதன் உருவாக்கிய இயந்திரங்கள்   (5) விசேட பயிற்சி அறிவுள்ள ஊழியர்

08) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் விலைப் பொறிமுறையொன்றின் தொழிற்பாடக கருதப்படுவது யாது?
   (1) வருமானங்களை சீராக பங்கிட வழிகாட்டுகின்றது.
   (2) உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு சாதனமாக செயற்படுகின்றது.
   (3) வளப்பங்கீட்டை வினைத்திறனாக்குவதற்கு தகவல்களை வழங்குகின்றது.
   (4) உணவு உற்பத்திகளை மக்களிடம் பகிர வழிகாட்டுகின்றது.
   (5) இலாபங்களை உற்பத்தியாளரிடையே பகிர வழிகாட்டுகின்றது.

09) உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் சாய்வு நிலையானது எனின் பொருத்தமான கூற்று எது?
   (1) வளையியின் வடிவம் நேர் கோடாகின்றது.
   (2) வளையி உற்பத்திக்கு குழிவான வடிவத்தைப் பெறும்.
   (3) வளையி நேர்ச் சாய்வு கொண்டதாக அமைகின்றது.
   (4) அமையச் செலவான அதிகரிக்கும் இயல்புடையதாகின்றது.
   (5) உற்பத்தி இயலளவு நிலையானதாகின்றது.

10) பொருளாதாரம் உற்பத்தியில் வினைத்திறனை கொண்டுள்ளது என்பது எதனைக் குறிக்கும்?
   (1) விலை எல்லைச் செலவிற்கும் எல்லை நன்மைக்கும் சமனாவது.
   (2) உற்பத்தி சாத்திய வளையியின் மீது உற்பத்திப்புள்ளி காணப்படுதல்.
   (3) உற்பத்தி சாத்திய வளையியின் உட்ப்புறமான புள்ளியில் காணப்படும்.
   (4) உற்பத்தி சாத்திய வளையின் மீதான சிறப்புப் புள்ளி ஒன்றாக இருத்தல்.
   (5) உற்பத்தி சாத்திய வளையி வலப்புறம் நோக்கி நகர்வடையும்.

11) குறிப்பிட்ட காலத்தில் கேள்வி விதி என்பது குறிப்பது பண்டத்தின் கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளில் ஏனையவை நிலையானதாக இருக்க
   (1) பண்டத்தின் வலை அதிகரிக்க அதன் கேள்வி குறைவானதாகும்.
   (2) நுகர்வோர் வருமானம் அதிகரிக்க பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும்.
   (3) பண்டத்தின் விலை அதிகரிக்க விற்பனை அளவு அதிகரிக்கும்.
   (4) பண்டத்தின் விலை குறைவடைய கொள்வனவு அளவு அதிகரிக்கும்.
   (5) பண்டத்தின் விலை அதிகரிக்க பதிலீடுகளின் கேள்வி அதிகரிக்கும்.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

12) குறித்த சந்தர்ப்பத்தில் அரிசிக்கான கேள்வி வளையி வலப்புறம் நோக்கி நகர்வடைவதற்கு காரணமாவது எது?

(1) அரிசியின் விலையில் ஒரு வீழ்ச்சி (2) கோதுமை மாவின் விலை வீழ்ச்சி
(3) அரிசி ஆலைகளின் தொழிலாளர் கூலிகள் வீழ்ச்சி (4) மறக்கறிகளின் விலை உயர்வு
(5) மக்கள் அரிசி உணவை அதிகம் நாடுதல்.


13) குறித்த சந்தர்ப்பம் ஒன்றில் ஏனைய காரணிகள் நிலையானதாக காணப்பட நுகர்வோரின் வருமானம் அதிகரிக்க பண்டமொன்றின் கேள்வியும் அதிகரித்தது எனின் அப் பண்டம் எதுவாக காணப்படும்?

(1) அத்தியவசியப் பண்டம் (2) ஆட்ம்பரப்பண்டம் (3) இழிவுப் பண்டம்
(4) சாதாரண பண்டம் (5) கிபன் பண்டம்

14) பண்டம் ஒன்றின் விலை அதிகரிக்கும் போது கொள்வனவு அளவு குறைவடைந்தது. அதே வேளை நுகர்வோர் வருமானம் அதிகரித்த போதும் அப்பண்ட கொள்வனவு குறைவடைந்தது. எனவே அப்பண்டம் எதுவாக இருக்கும்?

(1) இழிவுப் பண்டம் (2) கிபன் பண்டம் (3) ஆடம்பரப் பண்டம்
(4) சாதாரண பண்டம் (5) அத்தியாவசியப் பண்டம்

15) பின்வரும் வரைபின் மூலம் விளக்கப்படுவது எப்பண்ட வகுதியாகும்.




(1) கிபன் பண்டம் (2) நிரம்பியப் பண்டங்கள்
(3) பதிலீட்டுப் பண்டங்கள் (4) இழிவுப் பண்டங்கள்
(5) சாதாரண பண்டங்கள்

16) பண்டத்தின் விலை 10ரூபா எனின் கேள்வித்தொகை 100 அலகுகள் விலைக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானம் - 1.0 எனின் 500 அலகுகள் எவ்விலையில் கொள்வனவு செய்யப்படும்?

(1) 15 ரூபா (2) 5 ரூபா (3) 10 ரூபா (4) 4 ரூபா (5) 2 ரூபா

17) பண்டமொன்றின் கேள்விச் சசமன்பாடு QD = 400 -10P எனின் 30 ரூபாவில் விலைக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானம்?

(1) -3 (2) -0.3 (3) -1.0 (4) -1.5 (5) -0.5

18) பண்டமொன்றின் விலை 10% ஆல் அதிகரிக்கும் போது விற்பனை வருமானம் நிலையானதாக காணப்பட்டது. எனின் அப்பண்டம் எது?

(1) நெகிழ்வுள்ளது (2) நெகிழ்வற்றது (3) அலகுநெகிழ்ச்சியானது
(4) நிறைவான நெகிழச்சியானது (5) நிறைவான நெகிழ்வற்றது

19) பண்டமொன்றின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி 1.5 எனின் அப்பண்டம் குறிப்பாக எதுவாக இருக்கும்?

(1) அத்தியாவசியம் (2) சாதரணம் (3) இழிவு
(4) கிபன் (5) ஆடம்பரம்

20) குறித்த பண்டமொன்றின் நுகர்வோர் 40/= ரூபா விலையில் எந்வொரு அலகையும் கொள்வனவு செய்ய தயாராக இல்லை என்பதுடன் பூச்சிய விலையில் 400 அலகை கொள்வனவு செய்வர் எனின் அலகு கேள்வி நெகிழ்ச்சிக்குரிய விலை யாது?

(1) 40/= ரூபா (2) 10/= ரூபா (3) 20/= ரூபா (4) 5/= ரூபா (5) 15/= ரூபா

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **அ, ஆ பகுதிகளில் இருந்து குறைந்தது இரு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### "அ" பகுதி

01) 1. பொருளாதாரப் பொதுச் செயற்பாட்டு மூலதனம் என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக.

2. ஊழிய விளைதிறன் என்பதனால் கருதப்படுவது யாது? அதனை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டைக் கூறுக.

3. பண்டங்கள் - தீயபண்டங்கள் என்பவற்றை வேறுபடுத்தி பண்டங்களின் வகைபடுத்தலைக் குறிப்பிடுக?

4. பொருளியலில் மையப்பிரச்சனையாக கருதப்படுவது எது எனக் குறிப்பிட்டு அது ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றது என்பதனைக் கூறுக.

5. அமையச் செலவு எண்ணக்கருவை விளக்குவதுடன் அதன் அடிப்படை அம்சங்கள் இரண்டைக் கூறுக. (5 × 4 = 20 புள்ளிகள்)

02) 1. பொருளாதாரம் ஒன்று சந்தைப்பொருளாதாரம் என அழைக்கப்படக் காரணங்கள் யாவை?

2. கட்டளைப் பொருளாதாரம் ஒன்றின் எதிர் விளைவுகள் யாவை?

3. அடிப்படைப் பொருளாதாரம் பிரச்சனைகள் யாவை? அவை ஒவ்வொன்றினாலும் கருதப்படுவது யாது?

4. சமூகச் சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் அரசின் வகிபாங்கள் யாவை? உதாரணங்கள் குறிப்பிடவும்?

5. பொருளாதாரம் ஒன்றை மதிப்பிட பயன்படும் தகுதி விதிகள் யாவை?

(5 × 4 = 20 புள்ளிகள்)

03) 1. பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி இயலளவை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

2. உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் மூலம் விளக்கக் கூடிய பேரினப் பொருளாதார எண்ணக்கருக்கள் யாவை?

3. உற்பத்திக்கு குழிவான வடிவம் கொண்ட சாத்திய வளையி குறிப்பாக உணர்த்துவது யாது? (3 × 4 = 12 புள்ளிகள்)

4. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையிகளில் எவ்வாறு வெளிப்படுத்துவீர்?
   (அ) வேலையின்மை அதிகரிப்பு
   (ஆ) தைத்த ஆடைத்துறைத் தொழிலாளரின் வேலைத்நிறுத்தல்கள்
   (இ) தொழிற்பற்ற ஊழியர்களுக்கு தொழில் வாய்ப்புத்திட்டங்கள்
   (ஈ) பொருளாதார உட்கட்டுமானங்கள் நவீனமையமாக்கப்படல். (4 × 2 = 8 புள்ளிகள்)

### "ஆ" பகுதி

04) 1. பண்டமொன்றின் கேள்வி வளையி நகர்வடையக் கூடிய இரு சந்தர்பங்கள் கூறுவதுடன் அவை எவ்வாறு தாக்கம் செலுத்தும் என விளக்குக.

2. பண்டமொன்றின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் விலைதவிர்ந்த ஏனையவை மாறாதிருக்க கருதப்படும் பண்டத்தின் விலை குறைவடைய அதன் கேள்வித் தொகை அதிகரிப்பதற்கு காரணங்கள் யாவை?

3. கேள்வி விதிக்கு முரண்பாடான சந்தர்ப்பங்களைக் கூறுக?

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

4. பண்டமொன்றின் சாதாரண நிரம்பல் வளையின் மீது புள்ளி அசைவு குறிப்பாக உணர்த்துவது யாது?
5. கேள்விக்கும் - கேள்வித் தொகைக்கும் இடையிலான வேறுபாடு யாது?

(5 × 4 = 20 புள்ளிகள்)

05) 1. 

| விலை | கேள்வித்தொகை |
|---|---|
| 10 | 100 |
| 12 | 60 |

மேற்கூறிய அட்டவணைக்கான சமன்பாட்டைத் தருக?

2. பண்டமொன்றின் விலை பூச்சியம் எனின் நுகர்வோர் ஆகக்கூடியதாக 400 அலகுகளை கொள்வனவு செய்யத்தயாராக உள்ளன. இருப்பினும் விலை 40/= எனின் எந்தவொரு அலகையும் கொள்வனவு செய்யத்தயாராக இல்லை. இத்தரவுகளிற்கு அமைவாக இப்பண்ட கேள்வி வளையிக்காண சமன்பாட்டை தருக.
3. பண்டமொன்றின் கேள்விச் சமன்பாடு QD = 500 -25P எனின்
   (அ). 10/= விலையில் கொள்வனவுத் தொகை யாது?
   (ஆ) 200 அலகுகள் எவ்விலையில் கொள்வனவு செய்யப்படும்?
4. பண்டமொன்றின் விலை 5/= ரூபா எனின் கேள்வித்தொகை 500 அலகுகள் விலை 5/= ஆல் மாற்றடையுமாயின் கேள்வித் தொகை 100 அலகினால் மாற்றமடையுமாயின் கேள்விச் சமன்பாடு யாது?

(5 × 4 = 20 புள்ளிகள்)

06) 1. 

| X பண்டத்தின் விலை | X பண்டத்தின் கேள்வித்தொகை |
|---|---|
| 10 | 500 |
| 12 | 480 |

   (1) 10/= விலையில் விலைக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் யாது?
   (2) X பண்டம் விலைக் கேள்வி நெகிழ்ச்சியற்றதா?

2. பின்வரும் தரவுகள் உமக்கு தரப்பட்டுகின்றன.
   - ✓ Xப் பண்ட விலை 10% ஆல் அதிகரித்த போது Zப் பண்டக் கேள்வி 15% ஆல் அதிகரித்தது.
   - ✓ நுகர்வோனின் வருமானம் 10% ஆல் அதிகரித்த போது Xப் பண்டக்கேள்வி 5% ஆல் அதிகரித்தது.

   (1) X பண்டத்திற்கான வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானம் யாது?
   (2) X – Z பண்டங்களுக்கிடையிலான குறுக்கு கேள்வி நெகழ்ச்சிப் பெறுமானம் யாது?
3. வில் கேள்வி நெகிழ்ச்சி கணிப்பீட்டுச் சந்தர்பத்தைக் கூறி அது எவ்வாறு அளவிடப்படுகின்றது என்பதனைக் கூறுக?
4. நேர்க் கோட்டுக் கேள்வி வளையி ஒன்றின் எப்புள்ளியிலும் விலைக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானம் சமமானதாக காணப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
5. விலைக் கேள்வி நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

(5 × 4 = 20 புள்ளிகள்)